செ.வெ.எண்.77 நாள்.22.07.2017.

திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் உலக மக்கள் தொகை தின போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் உலக மக்கள் தொகை தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.07.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்பேசியதாவது–

திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றினை தூய்மை படுத்தும் பணிகளில் பங்கேற்று சிறப்பாக சேவை புரிந்த ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இக்கலைக் கல்லூரியின் மூலம் பேட்டை நரிக்குறவர் காலனி பகுதியில் சுகாதாரம் மற்றும் கல்வி அறிவினை மேம்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. கல்வி தந்தை காமராஜர் பிறந்த நாளினையொட்டி கல்வி வளர்ச்சி நாள் விழா நரிக்குறவர் காலனியில் நடத்தப்பட்டது. அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இவ்விழா நடத்தப்பட்டது. குறைந்த வயதில் திருமணம் செய்வது, மக்கள் தொகை பெருக்கத்திற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது. மேலும், திருமண வயதினை அதிகரித்தல், குழந்தை பேறு தள்ளி வைத்தல், பெண் கல்வியினை ஊக்கப்படுத்துவதன் மூலம் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். பெண்கள் கல்வி கற்று வேலைவாய்ப்பினை பெற வேண்டும். அப்போது தான் நீங்கள் தன்னம்பிக்கையுடன் சுதந்திர முடிவுகளை எடுக்க முடியும். மக்கள் தொகை பெருக்கத்தால் உணவு பற்றாக்குறை, எங்கு சென்றாலும் நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு சிரமங்கள் ஏற்படுகிறது. எனவே, மக்கள் தொகை பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு கருத்துக்களை நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எடுத்துக் கூறி விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் துணை இயக்குநர் மரு.கார்குழலி, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் திரு.செந்தில்குமார், குடும்பநலத் துறை துணை இயக்குநர் திரு.ஆறுமுகம், மாநகராட்சி சுகாதார அலுவலர் மரு.பொற்செல்வன், ராணி அண்ணா அரசு மகளிர் கலைக்கல்லூரி துணை முதல்வர் திருமதி.மைதிலி, திருநெல்வேலி மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு.கஜேந்திரபாபு, ஜனபிரியா டிரஸ்ட் இயக்குநர் திரு.ஜான்சன், மாவட்ட கல்வி மற்றும் தகவல் அலுவலர் திரு.அப்துல்காதர் மற்றும் கல்லூரிகளின் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.